உ

சிவமயம்



இணுவில் மேற்கு

# அமரர் வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## 31ம் நாள் நினைவு மலர்

06.08.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் மேற்கு

**அமரர்**

# வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

## 31ஆம் நாள் நினைவு மலர்

*06.08.2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் நன்மைக்காகவே எங்களைக் கண்டித்தும்,
தண்டித்தும், அரவணைத்தும், அல்லும் பகலும்
ஆண்டவனை வேண்டியும் எங்களை
வளர்த்துருவாக்கிய பாச உணர்வின் வடிவமான
ஆச்சீ! அருவமாகி இன்று நாங்கள் கனவிலும்,
கற்பனையிலும் காட்சி நல்கிக் களிப்பும்,
கவலையும் கலந்தே நல்கும் கருணை வடிவே!
கடின உழைப்பாற் காய்த்துப் போன
கைகளுடனான உங்கள் கால்களில் இச் சிறு
மலரைக் காணிக்கையாக வைக்கின்றோம். ஏற்று
எங்கள் உயிர்களில் என்றும் கலந்து
நின்றருளுங்கள் ஆச்சீ!

அன்பு
வாரிசுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மலர்வு

.

.

1910



உதிர்வு

05

.

07

.

2016

அமரர்

# வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை

அவர்களின்

## திதி வெண்பா

துன்முகி ஆனி சுடரும் வளர்பிறை
மன்னு துதியையாம் மாண்திதியில் - அன்னை
இணுவில்சின் னப்பிள்ளை வேலுப்பிள் ளைசேர்
கணபதிதாள் எய்தினார் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைப்பாடல்கள்



## விநாயகர் துதி

திருவும் கல்வியும் சீரும் தளைக்கவும்
கருணை பூ க்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப் பேணுவோம்

## தேவாரம்

எத்தாயெத்தந்தை யெச்சுற்றத்தா
　　　ரெம்மாடு சும்மா மேவர் நல்லார்
செத்தால் வந்து தவுவாரொருவரில்லைச்
　　　சிறு விறகாற்றீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாயவேடத்தாய் நீடு பொன்னித்
　　　திருவானைக் காவுடைய செல்வானென்
அத்தாவுன் பொற்பாத மடையப் பெற்றா
　　　லல்ல கண்டங்கொண்டடியேனென் செய்கேனே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
　　　அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
　　　புழுத்தலைப் புலையனே தனக்குச்
செம்மையே யாயசிவபாத மளித்த
　　　செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
　　　எங்கெழுந்தருளுவதினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற் கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன்தடியின் கீழ் இருக்கவென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்ககுறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை - இணுவில் மேற்கு
## அமரர் திருமதி வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை
## அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

ஈழமணித் திருநாட்டில், இன்பத் தமிழும் இறைநெறிச் சைவமும் இனிது வாழும் இணுவிற் கிராமத்து மஞ்சத்தடிக் குறிச்சியில் ஒரு வேளாண் குடியில் பொன்னம்பலம் தந்தைக்கும், நாகாத்தை தாய்க்கும் கடைசிச் சேயாக 1910இல் பிறந்தவர் அமரர் சின்னப்பிள்ளை. இவருக்கு கணபதிப்பிள்ளை அன்னப்பிள்ளை அம்பலவாணர், சின்னமோனை என நால்வர் மூத்த உடன்பிறப்புக்கள் இருந்தனர். அமரர் வளர்ந்து மணப்பருவம் எய்திய காலை அன்னாரின் மாமியார் மகன் சங்கரப்பிள்ளை வேலுப்பிள்ளை எனும் விவசாயிக்கு 1928ஆம் ஆண்டு திருமணம் செய்துவைக்கப்பட்டார். பிள்ளையார், முருகன் மீதான இவர்களின் தீவிர நோன்பு, வழிபாடுகளின் பேறாக எட்டு வருடங்களின் பின் 1936இலிலிருந்து, குணரத்தினம், பஞ்சாட்சரம், பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, கமலேஸ்வரி, ஈஸ்வரி, வைகுந்தவாசன் என்னும் 7 பிள்ளைகள் அடுத்தடுத்துப் பிறந்தனர்.

தோட்டம், குடிசைத் தொழில்களில், இரவு பகல் பாராதுழைத்துப் பிள்ளைகளை வளர்த்தும் படிப்பித்தும் வந்தனர். இடை வயதில் கொடுநோய் ஒன்றினால் படிப்பு நின்றுவிட்ட ஒரு பெண்பிள்ளை தவிர ஆறு பிள்ளைகளும் S.S.C அரசதேர்வில் தேறினர். அவர்களில் குணரத்தினமும், பஞ்சாட்சரமும் ஆசிரியர்களாயினர். கடைசி மகன் வைகுந்தவாசன் இ.போ.ச வில் பணியாற்றினார்.

அமரர் சின்னப்பிள்ளை அம்மையார் பிள்ளைகள் "ஆச்சி, ஆச்சி" என்று நெஞ்சுருகி அழைக்கும் வண்ணம் அவர்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்திலாட்டினார். ஊர்ப்பிள்ளைகளும், ஊரவர்களும் இவர்களைப் பின்பற்றி ஆச்சீ என்றே அன்போடு அழைத்துக் கொண்டாடும் வண்ணம், எவர்க்கும் இரங்கியும், எவர்க்கும் உதவி புரிந்தும், வீடுவந்த எவரையும் அன்பாக வற்புறுத்தி உண்ணவோ, அருந்தவோ வைத்து அனுப்புவார். கணவர் வழித்தன்வழிப் பெறாமக்களை அழைத்து ஆசைப் பண்டங்கள் ஆக்கி ஊட்டியும், கருணைமயமாக வாழ்ந்தார். தோட்ட வெளியோரம் அமைந்த அவரது வீட்டில், அந்தரித்து நாடிவரும் தோட்டக்காரர்களின் தாகந் தீர்க்கவெனக் காலை முதல் மாலை வரை ஒரு தேநீர்ப்பானை கொதித்துக் கொண்டேயிருக்கும்.

இந்த உண்மைகள் அமரரின் பூதவுடலைச் சூழ்ந்து அமர்ந்து பெண்கள் மூன்று நாட்கள் வைத்த புலம்பல்களில் அடிக்கடி குறிப்பிடப்பட்டன. தமது 106 ஆவது வயது வரை - கடைசிவரை தமது இயற்கைக் கடமைகளை, தாம் கஷ்டப்பட்டுப் பெற்று வளர்த்த பிள்ளைகளிடம்கூடக் கடமைப்படக்கூடாதென்று, முழுமையாகத் தாமே நிறைவேற்றி வந்தார்.

அமரரின் மடியில் தவழ்ந்து வளர்ந்திருந்த ஒரு பெறாமகன் இராசன் எனப்படும் சின்னத்துரை அமிர்தலிங்கம் என்பவர் அமரரின் மறைவுச் செய்தி கேட்டு, பிரான்சிலிருந்து விமானமேறிப் பறந்து ஓடோடி வந்து அமரரின் ஏழில் 6 பிள்ளைகளோடு தானும் ஒரு மகனாக அமரர் சின்னப்பிள்ளைக்கு ஈமக்கடன்கள் நிறைவேற்றி யமையைக் கண்ட ஊரவர்களில் அழாதவர்களே இல்லை. மூன்று நாட்கள் முன்பே மயங்கிவிட்ட அமரர் சின்னப்பிள்ளை இணுவைக்கந்தன் மகோற்சவம் பூர்த்தி நாள்வரை காத்திருந்து மறுநாள் 05.07.2016 பகல் 1.30 மணியளவில் இறைபதம் எய்தினார். அன்னாரின் ஆன்மாவும், குடும்பத்தார் நெஞ்சங்களும் சாந்தியடையப் பருத்தி விநாயகன் பாதங்களை இறைஞ்சுவோமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் சின்னப்பிள்ளையின் பிள்ளைகளும் குடும்பத்தினரும்

01. மகன் குணரத்தினம் + மருமகள் இணுவில் பாலாம்பிகை
பேரப்பிள்ளைகள் அமரர் அருள்மொழி
ஐங்கரன் + சிவனியா
அமுதினி

02. மகன் பஞ்சாட்சரம் + மருமகள் நவற்கிரி விவேகானந்தசிவம்
பேரப்பிள்ளைகள் வெண்ணிலா + சண்முகானந்தம்
கலைவாணி + மகாலிங்கசிவம்
செங்கோடன்
வேழத்தெழிலன் + விஜிதா
உமாவஞ்சி + சிவராஜ்குமார்
மகிழினி + கஜராம்

03. மகள் பரமேஸ்வரி + மருமகன் இணுவில் கார்த்திகேசு
பேரப்பிள்ளைகள் திருக்கழுக்குன்றன் + ராஜினி
கௌரி + தவசோதி
கல்யாணி + மகேஸ்வரன்
நந்தினி + சிவாகரன்
எல்லாளன் + அனித்தா
செவ்வேள் + விஷ்ணுப்பிரியா

04. மகள் ஞானேஸ்வரி + மருமகன் உடுவில் சண்முகநாதன்
பேரப்பிள்ளைகள் திருவருட்செல்வன் + நளினி
சுபாசினி + இராசேந்திரன்
இளந்திரையன் + சசிரேகா
பாடினி + ஆனந்தசங்கர்
பளிங்கன் + சுலேகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. மகள் கமலேஸ்வரி + மருமகன் உடுப்பிட்டி தவராசா

| | |
|---|---|
| பேரப்பிள்ளைகள் | பகீரதன் + அனுஷா |
| | மேகலா + சுரேந்திரன் |
| | பார்த்தீபன் |

06. மகள் ஈஸ்வரி + மருமகன் ஏழாலை திருநாவுக்கரசு

| | |
|---|---|
| பேரப்பிள்ளைகள் | சிந்துஜா + அன்புச்செழியன் |
| | சோபனா + மதிவரன் |
| | பகீரதி + சுஜிகரன் |

07. மகன் வைகுந்தவாசன் + மருமகள் உடுவில் இரட்ணேஸ்வரி

| | |
|---|---|
| பேரப்பிள்ளைகள் | அன்புச்செழியன் + சிந்துஜா |
| | லாவண்யன் + கிருசிகா |

**அமரர் சின்னப்பிள்ளை கணவர் பிள்ளைகளுடன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனைப் பாட்டி [கின்னஸ் பாட்டி]

"பாட்டி எங்கள் பாட்டி"
நூறாண்டு காலம் வாழ்க!
இது உலக வழக்கில் உள்ள வாழ்த்து!
ஆனால் நீங்கள் நூற்றாறு ஆண்டுகள் வாழ்ந்து
உலக சாதனை படைத்துள்ளீர்கள்!
என் அம்மா உங்கள் மூத்த மகள்
அவவுக்கு நீங்கள் சீனி ஆச்சி!
ஆனால் பேரர்கள் எமக்கும் நீங்கள் சீனியாச்சி!
இத்தனை வயதில் எத்தனை சாதனைகள்!!
குடும்பம், வாழ்க்கை, இன்பம், துன்பம், அத்தனையும் கடந்து
எல்லோரையும் ஒரே மாதிரி அரவணைப்பீர்கள், வாரத்தில்
ஒருநாள் (வெள்ளி) பிள்ளையாரை வணங்கி "இரத்தினமும்
பிளளைகளும் எப்படி இருக்கிறார்கள்" விசாரித்துச் செல்வது
உங்கள் வழக்கமாகும்.
நீங்கள் செய்த புண்ணியம் இத்தனை வயதிலும்
அத்தனை உறவுகளும் பக்குவமாகவும், பற்றுடனும் பராமரித்து
உங்களைச் சொர்க்கத்துக்கு அனுப்பினார்கள்.
நீங்களும் மனநிறைவுடன் சென்றுள்ளீர்கள்!
அந்த நாள் ஞாபகம் இன்றும் என்னுடன் (2013ம் ஆணடு)
ஊருக்கு வந்தேன் என்னைப் பார்க்க உங்களால் முடியாமல்
குரலைக் கேட்டதும் ஆசையாய்க் கதைத்தீர்கள்!
பார்வை இல்லாமலும் "இருண்டு விட்டது கெதியாய் போ!"
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டும்!
என்றும் எல்லோருடனும் இருந்து
எங்களை வழிநடத்துவீர்கள்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

பேர்த்தி தவமணி, ஜெயராசா

ஸ்காபறோ,
கனடா.
10.07.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்ந்த வேளையிலும் தேயாத உணர்வுகள்

*அமரர் 100ஆவது அகவையை அடைந்த போது தினமுரசு பத்திரிகையில் வெளியிடப்பட்ட பேட்டி (20.10.2010)*

சைவ ஆலயங்களையும், கல்விக் கூடங்களையும் மாறுபட்ட இசைக் கலைகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கி வரும் இணுவில் கிராமத்தை அறியாதோர் எவருமில்லை என்று கூறலாம்.

இத்தகைய பெருமை வாய்ந்த கிராமத்தில் விவசாய விளை நிலங்கள் சூழ்ந்த இணுவில் மேற்குப் பகுதியில் வாழ்ந்து வரும் திருமதி வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை என்னும் மூதாட்டி ஒருவர் தனது நூறாவது பிறந்த நாள் விழாவை சுற்றம் சூழ வெகுவிமரிசையாகக் கொண்டாடியுள்ளார்.

நூறாவது வயது வாழ்க்கை என்பது ஒரு நூற்றாண்டு கால வாழ்க்கை என்பதாகும். இத்தகையசிறப்பு மிக்க மூதாட்டியை தினமுரசு சார்பில் பேட்டி காணச் சென்றபோது வெண்ணிறக் கூந்தலுடன், சுருக்கங்கள் நிறைந்த முகப் பொலிவுடன், உடல் தளர்ந்த நிலையிலும் உறுதி தளராத குரலோசையில் இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தார்.

நூறு வயதில் கம்பீரமான தோற்றத்துடன் காட்சியளித்த அம்மூதாட்டியுடன் நடத்திய உரையாடலை கேள்வி பதிலாக வாசகர்களுக்குத் தருகின்றோம்.

**கேள்வி :** உங்களது குடும்பம் பற்றிக் கூறுங்கள்

**பதில் :** எனது கணவர் வேலுப்பிள்ளை 1987இல் இறந்துவிட்டார். எனக்கு ஏழு பிள்ளைகள் மூத்தமகன்களான குணரத்தினம், பண்டிதர் ச.வே பஞ்சாட்சரம் ஆகிய இருவரும் ஆசிரியர்கள். பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, கமலேஸ்வரி, ஈஸ்வரி, வைகுந்தவாசன் ஆகியோர் ஏனைய பிள்ளைகள்

**கேள்வி :** எத்தனையாம் வகுப்பு வரை படித்தீர்கள்?

**பதில் :** அந்தக் காலத்தில் பெண் பிள்ளைகளைப் படிப்பிப்பது மிகக் குறைவு. நான் இணுவில் அ.மி.த.க பாடசாலையில் (இன்றைய இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பாடசாலை) சிறிது காலம் படித்தேன். எத்தனையாம் வகுப்பு என்பது தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:** திருமணம் எத்தனை வயதில் நடந்தது?

**பதில் :** எனக்கு 18 வயதில் திருமணம் நடந்தது. ஏழு வருடங்கள் பிள்ளைகள் இல்லை. கோயிலில் நேர்த்தி வைத்தோம். அதன் பின்னர்தான் ஏழு பிள்ளைகள் பிறந்தனர்.

**கேள்வி:** உங்கள் கணவருடன் வாழ்ந்த வாழ்வு பற்றிக் கூறுங்கள்.

**பதில்:** அது ஒரு மறக்கமுடியாத காலம். எந்தச் சீதனமும் வாங்காமல் தான் என்னைக் கலியாணம் செய்தவர். முதலில் வறுமைதான். தோட்டம் செய்யத் தொடங்கினார். மூன்று கிணத்தடிப் பெரிய தோட்டம். அப்ப வாட்டர்பம், மோட்டார் ஒண்டும் இல்லை. துலாமிதித்துப் பட்டை மூலம் தான் இறைப்பு. விடிய நான்கு மணிக்குக் கிணற்றடியில் போய் நீண்டு "கூ கூ" என்று சத்தமிடுவார். அயவர்கள் உதவிக்கு வருவார்கள். பிள்ளைகளைப் படிப்பித்து வீடு கட்டினது எல்லாம் தோட்டச் செய்கையாலைதான். நானும் இடியப்பம், தோசை, அப்பம் சுட்டுவித்து வருமானத்தைத் தேடினேன். தோட்டக் கரையிலதான் எங்கட வீடு, அதனாலை மற்றத் தோட்டக்காரரும் தேத்தண்ணி குடிக்கச் சாப்பிட எங்கட வீட்டை தான வருவினம். காலமை எட்டு மணி தொடக்கம் இரவு எட்டு மணி மட்டும் தேத்தணிப்பானை கொதிச்சுக் கொண்டே இருக்கும். அதுவும் ஒரு வாழ்க்கைதான். இப்பவும் மறக்கமுடியவில்லை.

**கேள்வி:** உங்களது கணவர் இறந்த போது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?

**பதில் :** அவர் முந்தி ஒருக்காத் துலாவாலை விழுந்து முள்ளந்தண்டு உடைந்து படுத்திருந்தபோதே என்னால தாங்காகேலாமல் அழுதுகொண்டு திரிஞ்சனான். அவற்றை சாவை எப்படித் தாங்குவன். தம்பி. அப்பு ஆச்சி எங்களுக்கு ஒண்டும் தரேல்லை. தானே உழைச்சு எங்களை எல்லாம் நல்ல நிலைக்குக் கொண்டு வந்த சீவன்ரை சாவை என்னெண்டு தாங்கஏலும்?

**கேள்வி :** 50, 60 வயது வரை வாழ்வதே பெரிய விடயமான இன்றைய நிலையில் நூறு வயது வரை வாழ்வதற்காக மகிழ்ச்சி அடைகின்றீர்களா?

**பதில்:** நூறு வயது வரை வாழ்ந்தாலும் அதில சந்தோசப்பட ஒண்டும் இல்லை. ஒருகை வேலை செய்யாது, கண்பார்வையும் குறைந்து மங்கலான உருவமாகத் தெரியுமே தவிர ஆளை அடையாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணமுடியாது. அடிக்கடி தலைசுத்துது, ஒரு கண்ணிலை தொடர்ந்து வலி போய்ச்சேர விதி வரல்லையே எண்டுதான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

**கேள்வி :** நீங்கள் நூறு வயதைத் தாண்டியும் வாழ்வதற்கு என்னென்ன காரணங்கள் இருக்கலாம்?

**பதில் :** சத்தான மரக்கறியள் சாப்பிட்டனான். அந்தக் காலத்திலே உரம், மருந்து ஒண்டும் அடிக்காத மரக்கறியள் தான் கிடைச்சுது. அவர் சாவகச்சேரிக்காட்டிலை போய் நிறைய மீனும் வாங்கிக் கொண்டு வருவார். நல்ல சாப்பாடு தான் எல்லாத்துக்கும் காரணம்.

**கேள்வி :** நீங்கள் எதிர்பார்த்த விடயங்கள் ஏதும் நடக்காமல் போய்க் கவலைப்பட்டதுண்டா?

**பதில் :** அப்படி ஒண்டும் இல்லை. அப்பு ஆச்சியோடை இருக்கேக்கையும் எல்லாம் நடந்தது. அவரோடை இருக்கேக்கையும் எல்லாம் நினைச்சபடி நடந்தது. பிறகென்ன கவலை?

**கேள்வி :** இப்போது உங்களுக்கு என்னென்ன ஆசைகள் இருக்கின்றன?

**பதில் :** எல்லா ஆசைகளும் தீர்ந்து போய்ச்சுது. பூட்டப்பிள்ளையள் கலியாணம் கட்டிறதையும் பாத்திட்டன். எண்டாலும் எல்லாப் பிள்ளைகளும் பக்கத்தில வந்து இருக்கோணும் போலத்தான் கிடக்குது. முன்னைய காலத்தில் ஒவ்வொரு மாதப்பிறப்புக்கும் பிள்ளையாருக்குப் பொங்குவன். இப்ப ஏலாது எண்டாலும் கவலையில்லை முகம் கழுவிப்போட்டு எல்லாக் கடவுளையும் கும்பிட்டுப் போட்டுதான் தேத்தண்ணி குடிப்பன்.

**கேள்வி :** தினமுரசு வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில் :** பக்குவமாய்ச் சமைச்சுச் சாப்பிட்டுப் போட்டுச் சோலி சுறட்டுக்குப் போகாமைப் பிள்ளையளோட சந்தோசமா இருங்கோ.

பேட்டி கண்டவர் : தமிழ்வண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவில் விளாத்தியடி ஞானவைரவர் திருவிரட்டை மணிமாலை

## வெண்பா

இணுவில் விளாத்தியடி என்றோ அமர்ந்தோய்!
பணிவோர்க் கருளும் பரனே! - கொணர்கங்கைத்
தீர்த்தக் கிணற்றாய்! சிவன்காசி லிங்கமன்பர்
சார்த்த அருளாள் நீ மீந்தாய் (1)

## கட்டளைக் கலித்துறை

மீந்தோய் சிவனாய்! மிளிர்வோய் விளாத்தித் திருநிழலில்
மாய்ந்திறும் ஈழத் தமிழர் வருந்தி நெடுஞ்சமரில்
சேர்ந்தோம் உனை! ஓம் நமசிவாயசிவ சின்னமோதிப்
பூந்தூ வலிடும் எமை நீ புரந்தருள் இப்பொழுதே (2)

இப்பொழுதெம் ஏத்துகையுள் எந்தாய் நீ காட்டினாய்
முப்புரங்கள்! தீய்த்த முறைமையை - தப்பரிய
உள்ளூர்த் தனிப்பகை நாத்திகர். ஓரயலான்!
தள்ளரியம்! கண்டோமீ சா! (3)

சாக்காட் டியேதான் தனியோரை முற்றுற ஓய்வமெனும்
பேய்க்கூட் டமதோர் பெரும்புரம். எங்கள் நாடெரியால்
தீய்க்கும்! பழிசூழ் திருந்தாத் தமிழரெம் நாத்திகர் ஓர் புரமே!
தீக்குண்மை மூலவர் ஓர்புரம்! தீயயல் ஓர் புரமே! (4)

அப்புரம் மூன்றை அழித்தெம்மைக் காவென்று
அப்பனே! உன்தண் ணடிதொழுதோம்! - முப்புரங்கள்
தீயிட்டாய்! கால் சரணம்! தீராப் பிணி தீர்க்கும்
தூயவனே என்றேத்திட் டோம். (5)

ஏத்தியே என்றும் நமசி வாயவே இயம்பிவந்தோம்
பூத்தாய் புனிதா எமக்குள் பொலிந்தே ஒருதிருநாள்!
தீய்த்தே எதிரிகள் முப்புரம் எம்மிடர் தீர்த்தருள்வாய்!
காத்திடி லும்நீ கழிக்கிலும் நீ யென் றமுதனமே! (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதோமை நும் நும் அகத்துள்ளே பாரீர்
இழிபுரங்கள் மூன்றங் கிருப்ப - அழியினிவை
அல்லால் வெளிமுப் புரங்கள் அழியாவே
வெல்லவழி இல்லை யென்றால் வேறு! (7)

வேறா கிலதாய் உமதுயிர் மேவும் மலபுரமும்
ஊறாய் மலமவை ஊக்கிட நீர்செய் வினைப்புரமும்
சாறாய் அமைந்த தனித்தனி இச்சைக் குணபுரமும்
பாறா வரையும் இடரேயென் கின்றாய் பரமபொருளே! (8)

பரம்பொருளே! பாழ் மலங்கள் பாம்பாட்ட எம்மை,
வரம்பிகந்து வாழ்ந்தோம் மயங்கி - பெரும்பழிகள்
பல்பிறவி யீட்டிப் படுகின்றோம்! நோன் பழித்துக்
கொள்கிறவே காமுதற் சூர்! (9)

சூரயின் நொச்சியன் கோயிலின் பாங்கரில் வாழ்பவனே!
காரொளி ஐயனை, காளியை, ஐங்கரன் நாரணனை
ஊரடைந் தேத்திட உன்னயல் தாங்கும் வயிரவனே!
யாரெமைக் காப்பவர் அன்னையன் உன்னருள் கைவிடினே? (10)

கைவிடா தின்றுவரை காப்பவனார்? ஈர்மூன்றாம்
நைவிக்கும் புரங்கள் நவின்றவனார்? பொய்ம்மாயை
காணபித்த இன்புருயார்? கட்டழிக்க முப்புரமும்
பூண்பிப்பாய் நெஞ்சுநெறிப் போர்! (11)

போர்புரிந் தைந்து புலன்க ளடக்கித் தவம்புரியக்
கூர்பழி நெஞ்சின் குறைகள் துடைத்துக் குணமயமாம்
நீர்மை பெற, நா நமசி வயசொலும் நித்தலுமே!
ஊர், பல் நகரில் அடியர் உயிர்பேண் வயிரவனே! (12)

வயிரவா! தந்தை, மகன், சோ தரனை
உயர்மாட வீட்டினை, ஊரை - துயரெய்த
யுத்தத் திழந்தோர், உனதடியார் நெஞ்சாறப்
புத்தமுதே முப்புரங்கள் போக்கு! (13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கற் றவரோ புனிதனே உன்றன் அடியவர் நாம்!
தீக்குண் டுகளால் சிதைக்கக் கொடியர் பலதளிகள்
நோக்கிப் பதைத்தோம்! நொடித்தோர்குதவி புரிவதெனுஞ்
சாக்கில் நரிகள் மதம்மாற் றிடத்தளர் தாழ்ச்சிவேறே! (14)

வேறுபட்ட சூழ்ச்சிகளால் வேகின்றோம் உன்னடியோம்!
நீறுபட்டா லல்லாதெம் நெஞ்சிலெல்லாம் - நூறுதுன்பீன்
முப்புரங்கள், ஈழத்தில் மூள்துயரம் நீங்காது!
அப்பா நமச்சிவா யா! (15)

அப்பா நமசி வயவே! அடுவாய் மறுகணமே
முப்பாழ்ப் புரங்கள் அகத்தும் புறத்தும், மூளெரியில்!
தப்பா துனதாய் தருசா விலுமே தழுவிநிற்போம்
எப்போ திலுஞ்சுடர் ஏந்துதூண் டாஎல் லுடையவனே (16)

உடையாய் ஓர் மந்திரம்நல் ஓம் நமச்சி வாய!
உடல்நெஞ் சுடன்வாய் ஒருங்கி - வடிவாக
ஓதென்று நீயுரைத்த ஒண்கருணை நெஞ்சேத்தக்
காதலுடன் சொல்வமிரங் காய் (17)

காய்மன மெல்லாங் கனிகனி யாகக் கனிந்தழுதோம்!
ஓய்வில ராயுண் ணுகையில், உழைத்தல் உறங்குகையில்
நோய்களிற் கூட நுவன்றிடு வோமுன தைந்தெழுத்தே
போய்முடி யாமுன் பொசுங்குநம் மீழம் புரந்தருளே! (18)

புரந்தருளும் புண்ணியனே பூண்டுவடை மாலை
நிரந்தரமாய்க் காட்சிதந்து நிற்கும் - வரம்பிலருள்
வள்ளால்! மனங்களினால் காடுமேடு வாடடியோம்
ஒள்ளலர்கொண் டேத்திடுதல் ஓர்! (19)

ஓர்ந்திரங் கீழ நிலமுழு தும்ஓம் நமச்சிவாய
கூர்ந்தொலி செய்தல்! அகதி முகாங்கள் கொடுவிலங்குஞ்
சேர்ந்துறை கான்கள் சிறைகளுள் பக்தர் தொழலுணர்ந்தே
ஆர்ந்த நெற் றிக்கண் அனல்பரந் துண்க ஈர் முப்புரமே! (20)

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
**1910**

உதிர்வு
**05.07.2016**

**ஆசிரியர் திரு.சிவாகரன் அவர்களின் பேத்தியார்**

## அமரர்.
## திருமதி. சின்னப்பிள்ளை வேலுப்பிள்ளை

நேற்றிருந்த குலவிளக்கு
இன்று அணைந்து விட்டதுவே
பார்த்திருந்த உறவுகளோ
பதறியழுது தவிக்கின்றனர்
போற்றி வாழ்ந்த குடும்பத்தினர்
புலம்பியழுது நிற்கின்றனர்
கண்ணிமைக்கும் நேரத்திற்குள்
காலன் உமைக்கவர்ந்து சென்றான்
வேண்டுகின்றோம் இறைவனிடம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய

**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

07.07.2016

பிரிவுத் துயர் பகிரும்
**அண்ணாமலை அக்கடமி (இணுவில்)**
**ஆசியர்கள், மாணவர்கள்.**

வானவில் பிறிண்டேர்ஸ், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்ப ஒற்றுமையின் மூலவேராக வாழ்ந்து, எங்களை எல்லாம் ஒன்றாகக் கண்டு வந்த எங்கள் ஆச்சியின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வந்தும், தொலைபேசி, மின்னஞ்சல், தொலைநகல், முகநூல் மூலமாகவும், எங்கள் துயரில் பங்கு கொண்டும், ஆச்சிக்கு அஞ்சலி செலுத்தியும் எம்மைத் தேற்றிய அன்பு நெஞ்சங்களுக்கும், 3 நாட்களும் எங்களுடன் நின்று உதவிகள் புரிந்த உறவினர்களுக்கும், பிரான்சில், கனடாவில், லண்டனில் ஜேர்மனியில், சுவிஸில் எங்கள் வீடுகளுக்குத் தேடிவந்தும், தொலைபேசியிலும் துயர் பகிர்ந்த உறவினர், நண்பர்களுக்கும் பின்னர் அறிந்தறிந்து ஆச்சி இல்லம் வந்து எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் இந்தச் துயரச் செய்தியை வெளியிட்ட பத்திரிகைகள், தமிழ் CNN இணையப் பத்திரிகை, இணுவில் பொதுநூலக முகநூல் முதலான முகநூல்கள், கனடா கீதவாணி வானொலி, மற்றும் இணையதளங்களுக்கும் அமரரின் சபிண்டீகரணத்தில் கலந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்கேற்ற அனைவருக்கும் எங்கள் நன்றியை பணிவன்போடு சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்கள் வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியினர்




நூறாவது பிறந்ததினத்தின் போது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org